நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

**<u>குவிமுச பிரிவு 313(1)(ஆ) இன் படியான விசாரணை</u>**

1 வது எதிரி : திரு.சங்கர்
திரு.வெள்ளைச்சாமி (இறப்பு)
திரு.பொன்மாரி என்ற பொன்மாரிப்பாண்டியன் (இறப்பு)

| | | | |
|---|---|---|---|
| 1. | கேள்வி | : | அ.சா.1 கிருஷ்ணசாமி (சிறப்பு சார்பு ஆய்வாளர்), அ.சா.3 சசிக்குமார் (காவல் ஆய்வாளர்) ஆகியோர்கள் சிறப்பு சார்பு ஆய்வாளர் பன்னீர்செல்வத்துடன் 22.02.2017 ம் தேதி சாத்தூர் மேலகாந்தி நகரில் மணல் திருட்டு சம்பந்தமாக ரோந்து அலுவலில் இருந்தபோது மதியம் 03.00 மணியளவில் நகராட்சி பூங்காவிற்கு அருகே 1 வது எதிரி சங்கர் ஆகிய நீங்கள் ஓட்டி வந்த TN 58 S 5225 என்ற பதிவெண் கொண்ட டாடாஏஸ் வாகனத்தினை சோதனை செய்தபோது அதில் 45 சாக்கு மூட்டைகளில் மணல் இருந்ததாகவும், மேற்படி வாகனத்தில் 2 வது எதிரியாகிய நீங்களும் இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி : இல்லை |
| 2. | கேள்வி | : | அ.சா.1 கிருஷ்ணசாமி , மேலும் அவருடைய சாட்சியங்களில், மேற்படி சம்பவ இடத்தில் 1 வது எதிரியாகிய உங்களை விசாரித்தபோது, நீங்கள் ஓட்டி வந்த டாடாஏஸ் வாகனம் சாத்தூர் நடராஜா தியேட்டர் ரோட்டில் உள்ள முனியசாமி ஆசாரியின் மனைவி பெயரில் இருப்பதாகவும், அவரிடமிருந்து மாத வாடகைக்கு ரூ.7750/–க்கு பேசி 01.02.2017 ம் தேதி முதல் எடுத்து ஓட்டி வந்ததாக நீங்கள் கூறியதாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி :இல்லை |
| 3. | கேள்வி | | அ.சா.1 கிருஷ்ணசாமி மற்றும் அ.சா.3 சசிக்குமார் ஆகியோர்கள், மேலும் அவர்களின் சாட்சியங்களில், கட்டுபடியாகத காரணத்தினால் 3 வது எதிரி பொன்மாரி கூறியதன் பேரில் 3 வது எதிரி பொன்மாரி மற்றும் 2 வது எதிரி வெள்ளைச்சாமி ஆகியோர்களுடன் பேசி இரவு நேரத்தில் சாத்தூர் படந்தால் சக்கதிமாரியம்மன் கோவில் பின்புறமுள்ள வைப்பாற்றில் மணலை எந்தவித அனுமதியோ, உரிமமோ இல்லாமல் அள்ளி போக்குவரத்து நகரில் உள்ள பொன்மாரி வீட்டின் முன்பு போட்டு வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | 1 வது எதிரி : மணல் எதுவும் எடுத்து வரவில்லை. |
| 4. | கேள்வி | | மேற்படி இரண்டு சாட்சிகளும் மேலும் அவர்களுடைய சாட்சியத்தில், 1 வது எதிரி மற்றும் 2 வது எதிரி ஆகிய உங்களை மதியம் 03.15 மணிக்கு கைது செய்தும், சொத்துக்களை அத்தாட்சியின் பேரில் கைப்பற்றி 16.30 மணிக்கு கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து அத்தாட்சியில் (அ.சா.ஆ.1)கண்ட விவரங்களுக்கு நிலைய குற்ற எண் 108/2017 பிரிவு 379 இ.த.ச மற்றும் 21(1) Mines and Minerals Act ன் வழக்கு பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | 1 வது எதிரி : நாங்கள் அங்கு இல்லை |
| 5. | கேள்வி | : | அ.சா.3 சசிக்குமார் காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வக்குமார் மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | பார்வை மகஜர் (அ.சா.ஆ.4) மற்றும் வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்ததாகவும், பார்வை மகஜர் சாட்சிகளையும், சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள். |
| | பதில் | : | 1வது எதிரி : இல்லை |
| 6. | கேள்வி | | அ.சா.3 சசிக்குமார் காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், சம்பவ இடத்தை பார்வையிட்டதிலிருந்தும் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்தும் எதிரிகள் இருவரும் அரசுக்கு இழப்பு ஏற்படும் விதமாக நீர்வள ஆதாரத்திற்கு சேதம் விளைவிக்கும் விதமாக ஆதாயம் கருதி ஆற்று மணலை திருடி வந்த குற்றம் உண்மை என தெரியவந்ததால் 1வது மற்றும் 2வது எதிரிகளாகிய உங்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், சாட்சியம் அளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள். |
| | பதில் | | 1வது எதிரி : வீட்டில் இருந்து தான் என்னை அழைத்து சென்றார்கள் |
| 7. | கேள்வி | | அ.சா.3 சசிக்குமார் காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், வழக்கு சொத்துத்தினை படிவம்-95 (அ.சா.ஆ.6) மூலம் நீதிமன்றத்திற்கு ஒப்படைப்பு செய்ததாகவும், கைப்பற்றப்பட்ட மணலை மணலை வருவாய் கோட்டாட்சியரின் நடவடிக்கைக்கு உட்படுத்தியதாகவும், சாட்சியம் அளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள். |
| | பதில் | | 1வது எதிரி : இல்லை |
| 9. | கேள்வி | | அ.சா.3 சசிக்குமார் காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், 26.03.2017ம் தேதியன்று மணல் அள்ளிய இடம் யாருக்கு சொந்தமானது என்பது குறித்த விவரத்திற்கு கிராம நிர்வாக அலுவலருக்கும், கைப்பற்றப்பட்ட ஆற்று மணலின் மதிப்பு கோரி உதவி பொறியாளர், பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை வைப்பாறு வடிநிலபிரிவு எண்.1 ஆகியோர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள். |
| | பதில் | | 1வது எதிரி : பொய் |
| 10. | கேள்வி | | அ.சா.3 சசிக்குமார் காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், கிராம நிர்வாக அலுவலர் மதன்குமார் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மணல் திருடப்பட்ட இடமான படந்தால் கிராமத்திற்கு தெற்கேயுள்ள சக்தி மாரியம்மன் கோவிலுக்கு தெற்கேயுள்ள ஆற்றுபடுகை வைப்பாறு புல எண் 247ல் 27.30.5 ஹெக்டேர் பரப்புள்ள இடத்தில் இருந்தாகவும், அது சாத்தூர் ஆற்றுப்பாசன பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் சான்று (அ.சா.ஆ.7) வழங்கயதாக சாட்சியம் அளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள். |
| | பதில் | | 1வது எதிரி : தெரியாது |
| 11. | கேள்வி | | அ.சா.3 சசிக்குமார் காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், உதவி பொறியாளர் ராதகிருஷ்ணன் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மணலின் மதிப்பு ரூ.258 என்று சான்று (அ.சா.ஆ.8) வழங்கியதாகவும், மேற்படி இரண்டு சான்றுகளும் கிடைக்கப்பெற்றதாகவும், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள். |

| | | | |
|---|---|---|---|
| | பதில் | | 1 வது எதிரி : பொய் |
| 12. | கேள்வி | | அ.சா.3 சசிக்குமார் காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் முத்து முனியாண்டி அ.சா.3 விசாரித்த சாட்சிகளை மீண்டும் அழைத்து விசாரித்ததாகவும், சாட்சிகள் அ.சா.3 டம் கூறியது போலவே கூறியதாகவும், அவர்களின் வாக்குமூலங்களை அவர் தனியாக பதிவு செய்யவில்லை என்றும், , கோட்டாட்சியர் அலுவலகத்தில் வேலை செய்யும் சரவணன் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேலை செய்யும் பொன் மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மணல் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் 19.01.2018 ம் தேதி ஒப்படைப்பு செய்யப்பட்டது என்பதற்கு வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | 1 வது எதிரி : பொய் |
| 13. | கேள்வி | | அ.சா.3 சசிக்குமார் காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் முத்து முனியாண்டி கனிம வள சட்டத்தின் கீழான குற்றத்திற்கு நடவடிக்கை எடுக்க கேட்டு வருவாய் கோட்டாட்சியரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதால், கனிமவள சட்டத்தின் பிரிவை நீக்கி, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379 கீழான குற்றமாக மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை (அ.சா.ஆ.9) தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | 1 வது எதிரி : பொய் |
| 14. | கேள்வி | | அ.சா.3 சசிக்குமார் காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் முத்து முனியாண்டி அவருடைய விசாரணையிலிருந்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் வழக்கு சம்பவம் உண்மை என்று தெரிய வந்து எதிரிகளாகிய உங்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379 கீழான குற்றத்திற்கு 07.02.2018 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | 1 வது எதிரி : பொய் |
| 15. | கேள்வி | : | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | 1 வது எதிரி : பொய் வழக்கு |
| 16. | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | 1 வது எதிரி : உண்டு |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர், எண்.2
சாத்தூர்